காப்பாற்றுகின்ற நிலையிலேதான் இந்த நிலைமைகளெல்லாம் ஆரம்பத்திலே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டு 1,200 ரூபாயாக இருந்து, 1,500 ரூபாயாக ஆகி, இப்பொழுது 5,000 ரூபாயாக ஆகியிருக்கிறது. மேலும் கூட்டலாமா என்று வேண்டுமானால் கேளுங்கள்; ஆனால் உச்சவரம்பே இல்லாமல் செய்வது என்பது அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாக ஆகாது. அதைத் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

கன்னியாகுமரி கடற்கரை பகுதிகளில் வெளி நாட்டவர் மீன் பிடிப்பதைத் தடுக்கும் திட்டம்

* வினா எண். 756—திரு. கு. முத்துக்கிருஷ்ணன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி கடற்கரைப் பகுதிகளில் வெளிநாட்டுக் கப்பல்கள் (இந்தோசீனா, தைவான்) மீன் பிடிப்பது பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இதனால் குமரி மீனவர்கள் பாதிக்கப்பட்டு அரசுக்கு முறையிட்ட பின்னால் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(இ) மத்திய அரசுடன் இது சம்பந்தமாக அரசு தொடர்பு கொண்டு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ):— அயல்நாட்டுக் கப்பல்கள் இந்தியக் கடற்பகுதியில் ஊடுருவும்போதெல்லாம் காவல்துறையினரின் அதிகார வரம்பிற்குட்பட்ட கடல் எல்லைக்குள் ஊடுருவும் அயல் நாட்டுக் கப்பல்களை விழிப்புடன் மீன்துறை மற்றும் தனியார் விசைப்படகுகளைக் கொண்டு கண்காணிக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது. புதிதாக நிறுவப்பட்டுள்ள கிழக்கு மண்டல கடலோரப் பாதுகாப்புப் பணி மற்றும் சென்னையில் உள்ள இந்தியக் கப்பல்படை பிரிவும் இச்சம்பவங்களைத் தடுக்குமாறு அவ்வப்போது கேட்டுக்கொள்ளப்பட்டன.

(இ) அயல்நாட்டுக் கப்பல்களின் ஊடுருவல் குறித்த தகவல்கள் அனைத்தும் தமிழ்நாடு அரசு மூலம் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்தியக் கடல் எல்லைக்குள் அயல்நாட்டு மீன்பிடிக் கப்பல்களின் ஊடுருவலைத் தடுக்கும் முகத்தான், மத்திய அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக 8-5-1981 நாளிட்ட, மத்திய அரசு பாதுகாப்புத் துறையின் கடிதத்தின் மூலம் தமிழ்நாடு அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்திய கடல் மண்டல மசோதா (அயல்நாட்டு மீன்பிடித்தலை ஒழுங்குப்படுத்துதல்) 1981 என்றும் மசோதா ஒன்றை இயற்றி அதனைச் சட்ட மாக்கவும் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

[1982 ஏப்ரல் 5]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்தியக் கடற்பகுதியில் மிக்க விழிப்புடன் இருந்து அந்நிய நாட்டுப் படகுகளைக் கண்டு பிடிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது; ஆனால் உண்மை அப்படி இல்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்பு 8 கப்பல்கள், 10 கப்பல்கள் கூடி நின்று மீன்பிடித்துக் கொண்டு சென்று விட்டார்கள். அதுபற்றி ஆர்.டி.ஓ. அவர்களிடம் தெரிவிக்கப்பட்டும் பந்தோபஸ்து செய்யப்படவில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலைமைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதாவது அவசரச் சட்டம் போட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு, அதாவது 22-8-80, 2-9-80, 2-10-80, 6-10-80, மற்றும் 23-10-80 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரை ஓரங்களில் அயல் நாட்டு மீன்பிடிக் கப்பல்கள் குறிப்பாக தைவான் நாட்டுப் பெரும் மீன்பிடிக்கப்பல்கள் ஊடுருவி மீன்பிடித்ததன் காரணமாகத் தமிழக மீனவர்கள் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டது தமிழக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. இதை உடனடியாக மத்திய அரசுக்குக்கூட நாம் தெரிவித்தோம். அந்தச் சமயத்தில் இரண்டு கப்பல்கள் கைப்பற்றப்பெற்று அதன் காரணமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இந்த அவையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இதற்கு நிரந்தரப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, கடலோரப் பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்வது மட்டுமல்லாமல் இந்தியக் கடல் மண்டல மசோதா ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. அதன்படி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவது போன்ற தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடலில் நமது எல்லை எவ்வளவு? கடலிலிருந்து 200 மைல் தூரம் அந்தந்த நாட்டுக்குச் சொந்தம் என்று சர்வ தேச முடிவு ஏதாவது உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தந்த நாடுகளுடைய கடற்கரையிலிருந்து 200 மைல் அளவிற்கு அந்தந்த நாட்டுக்குச் சொந்தம். அதற்கப்பாலுள்ளது உலகம் முழுவதும் உள்ள நாடுகளுக்குச் சொந்தம். அந்த எல்லைக் குள்ளே வரும்பொழுதுதான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.